### 1,250 மரங்களை நட்டு

# திரு.வி.க. பூங்காவை பழைய நிலைக்கு கொண்டு வரவேண்டும்

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, செப்.29– மெட்ரோ ரெயில் சேவைக்காக வெட்டப்பட்ட மரங்களுக்குப் பதிலாக செனாய் நகர் பகுதியில் உள்ள திரு.வி.க. பூங்காவில் 1,250 மரங்களை நட்டு, அப்பூங்காவை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### நீதிபதி தொடர்ந்த வழக்கு

சென்னை செனாய் நகர் திரு.வி.க. பூங்காவுக்கு கீழ் மெட்ரோ ரெயில் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. செனாய் நகர் ரெயில் நிலையம், திரு.வி.க. பூங்கா இருந்த பகுதியில் இயங்கி வருகிறது. இதற்காக இந்த பூங்காவில் இருந்த பழமையான மரங்கள் வெட்டப்பட்டது.

இதை எதிர்த்தும், சுற்றுச்சூழல் துறையின் அனுமதியின்றி இப்பணிகளை சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் மற்றும் சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியவை மேற்கொண்டு வருவதாகக் கூறி சென்னை ஐகோர்ட்டில், சுமார் 45 பேர் கூட்டாக வழக்கு தொடர்ந்தனர். அந்த 45 பேரில், சென்னை ஐகோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியனும் ஒருவர்.

### சட்டவிரோதம்

இந்த வழக்கு மனுவில், ‘சுரங்கப்பாதை அமைப்பதற்காக செனாய் நகர் திரு.வி.க. பூங்காவை மெட்ரோ ரெயில் நிர்வாகம் கையகப்படுத்தியது. சுரங்கப்பாதை பணிகள் முடிந்ததும் அந்த பூங்காவை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வருவோம் என்று உறுதியளித்தது. ஆனால் தற்போது இந்த உறுதியை மீறி பூங்கா அமைந்துள்ள பகுதியில் மெட்ரோ ரெயில் நிலையம், பயணிகள் வசதி மையம், ‘வணிக வளாகங்கள்’ அமைப்பதற்கான கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது சட்டவிரோதம். இதற்கு தடை விதிக்கவேணடும்’ என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.மணிக்குமார், சுப்ரமணியம் பிரசாத் ஆகியோர் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:–

### மரங்கள் பலி

வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் கண்மூடித்தனமாக மரங்களை வெட்டுவதையும், இந்த திட்டங்களுக்காக மரங்களை பலியிடுவதையும் ஏற்க முடியாது. அரசு மரக்கன்றுகளை நடவேண்டும். திரு.வி.க. பூங்காவில் வெட்டப்பட்ட மரங்களுக்கு பதில், 1,250 பல வகையான மரங்கள் நடப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர். இதன்படி பூங்காவில் 1,250 மரங்களை நடவேண்டும்.

இந்த ஐகோர்ட்டை பொறுத்தவரை, ஒரு புறம் சென்னை மாநகரில் தேவையான வாகன நிறுத்தங்கள் உருவாக்க வேண்டும். மறுபுறம் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு மரங்களையும் பாதுகாக்க வேண்டியதுள்ளது. எனவே, ,திரு.வி.க. பூங்காவை பழைய நிலைக்கு அதிகாரிகள் கொண்டு வரவேண்டும். மெட்ரோ ரெயில் பணியின்போது, இப்பகுதியில் ஒலி மாசு அதிகம் இருந்ததாக மனுதாரர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், ஒலிமாசு நிர்ணயிக்கப்பட்ட அளவில்தான் இருந்துள்ளது என்பது உறுதியாகி உள்ளது. எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.